Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.130/2016

**P.W**. 3(LW5)

| | |
|---|---|
| Name | : **திரு. சரவணன்** |
| Father/Husband Name | : திரு, |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் இதற்கு முன்பு கூடுவாஞ்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று திருவள்ளூர் மாவட்டத்தில் வசித்து வருகிறேன்.

2) கடந்த 05.05.2016ம் தேதி காலை 7.30 மணியளவில் மாமல்லபுரம் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கிடைத்த ரகசிய தகவலின் பேரில் நானும், CIU உதவி ஆய்வாளர் சின்னதுரை, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் புண்ணியக்கோட்டி ஆகியோர் சகிதம் திருக்கழுக்குன்றம் நெரும்பூர் ஆயப்பாக்கம் ஆகிய இடங்களில் கண்காணித்துவிட்டு நாவாக்கால் கூவத்தூர் பேட்டை பனஞ்சாலையில் கண்காணித்தபோது ஒரு வீட்டிற்கு அருகில்

சந்தேகப்படும் படி ஒரு பெண் நபர் கோணிப்பைகளுடன் நின்றுக் கொண்டிருந்தார். எங்களை பார்த்து ஓட முற்பட்டவரை பிடித்து விசாரணை செய்தபோது முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னார். அவரின் பெயர் செல்வி க/பெ.ஆறுமுகம் என்று சொன்னார். அவர் அருகில் இருந்த கோணிபைகளை சோதனை செய்து பார்த்த போது ஒரு கோணி பையில் சுமார் 100 எம்.எல் அளவு கொண்ட 550 பாக்கெட் வீதம் இரண்டு கோணி பைகளில் மொத்தம் 1100 பாக்கெட்டுக்கள் மொத்தம் 110 லிட்டர் திரவம் இருந்தது. அதில் ஒரு பாக்கட்டை பிரிந்து நுகர்ந்து பார்த்தபோது அதில் விஷ நெடியுடன் கூடிய வாய் குமட்டலும், நெஞ்செறிச்சலும் ஏற்படும் வகையில் திரவம் இருந்தது. எனவே அது விஷ நெடியுடன் கூடிய எரிசாராயம் என்பதால் எதிரியை காலை 7.45 மணியளவில் எதிரி செல்வியை கைது செய்து எதிரியிடமிருந்த வழக்கு சொத்தினை கைப்பற்றி பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் தலைமை காவலர் 161 சுரேஷ் மற்றும் பெண் காவலர் 1270 சுமதி ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன்..
பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களிலிருந்து சுமார் 500 எம்.எல் அளவு கொண்ட ஒரு கோணி பையில் இருந்து இரண்டு பாட்டில்கள் வீதம் மொத்தம் 4 பிளாஸ்டிக் பாட்டில்களில் எரிசாராயத்தை எடுத்து சீல் வைத்து லேபிள் ஒட்டி மீதம் இருந்த எரிசாராயத்தை சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்து அழித்தல் சான்று தயார் செய்தேன். **(அழித்தல் சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 229/2016 சட்டப்பிரிவுகள் 4(1)(aaa), 4(1-A) TNP Act r/w 6 & 11 of RS Rules-ன் படி காவல் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தேன்.( **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எதிரியை

நீதிமன்றக் காவலுக்குட்படுத்தினேன்.

3. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்திலிருந்து மாதிரிக்கு எடுக்கப்பட்ட 500 எம்.எல் அளவு கொண்ட 4 பிளாஸ்டிக் பாட்டில்களை நீதிமன்றத்தில் படிவம் 91 மூலம் ஆஜர்படுத்தினேன். **(படிவம் 91 அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 13.10.2016ம் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்துடன் 2 பிளாஸ்டிக் பாட்டில்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு தலைமை காவலர் 835 திருநாவுக்கரசு என்பவர் மூலம் அனுப்பி வைத்து கடந்த 25.11.2016ம் தேதி தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து தடய அறிவியல் துறை உதவி இயக்குநர் சித்ரா என்பவரிடமிருந்து ரசாயன பகுப்பாய்வு சான்றினை பெற்றேன். **(ரசாயன பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பிய 2 பிளாஸ்டிக் பாட்டில்கள் மற்றும் மீதம் இருந்த மாதிரிக்கு எடுக்கப்பட்ட 2 பிளாஸ்டிக் பாட்டில்கள் மொத்தம் 4 பிளாஸ்டிக் பாட்டில்கள் அ.சா.பொ.1 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது).** சென்னை தடய அறிவியில் உதவி இயக்குநர் திருமதி.கலா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ரசாயன பகுப்பாய்வின் அறிக்கையின் அடிப்படையில் நச்சுத்தன்மை கொண்ட பொருட்கள் எதுவும் இல்லை என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதால் இந்த வழக்கின் சட்டப்பிரிவினை 4(1)(aaa), 4(1–A) TNP Act r/w 6 & 11 of RS Rules லிருந்து 4(1)(aaa) TNP Act r/w 6 & 11 of RS Rules ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. இத்துடன் எனது விசாரணை முடித்துக் கொண்டு எதிரி மீது சட்டபிரிவு 4(1)(aaa) TNP Act r/w 6 & 11 of RS Rules–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

காவல் நிலையத்தில் பொது நாட்குறிப்பு பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். எனக்கு கிடைத்த ரகசிய தகவலை பொது நாட்குறிப்பில் குறிப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொது நாட்குறிப்பு பதிவு செய்த விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு காலை சுமார் 5 மணியளவில் புறப்பட்டோம். சம்பவ இடத்திற்கு காவல் நிலைய அரசு வாகனத்தில் தான் சென்றோம். அந்த வாகனத்தின் ஓட்டுனரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்ற விவரத்தை இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராத நிலையில் கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர், மற்றும் மாதிரி வரைபடம் அல்லது சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் ரசாயன பகுப்பாய்வு அறிக்கைக்கு எடுக்கப்பட்ட மாதிரிக்கு போக மீதமுள்ள அளவை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி திருநாவுக்கரசு தடய அறிவியல் ஆய்வகத்திற்கு சென்று வந்த கடவு சீட்டினை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் 1 முதல்

3 வரை உள்ளவர்கள் சம்பவ தினத்தன்று பணியில் இருந்தார்கள் என்பதற்கான எந்த ஒரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ரசாயன பகுப்பாய்வு அறிக்கை வழங்கிய உதவி இயக்குநர் சித்ரா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். உதவி இயக்குநர் கலா என்பவரை விசாரணை செய்துள்ளேன். எரிசாராயத்தை நுகர்ந்து பார்க்கும் போது ஏற்பட்ட கண்ணெரிச்சலுக்கும் வாய் குமட்டலுக்கும் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பப்படவேண்டிய மாதிரிகளை 5 மாதம் காலதாமதமாக 13.10.2016 அன்று தான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினேன் என்றால் சரிதான். அந்த காலதாமதத்திற்கான காரணத்தை இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடமானது சுமார் 30 கி.மீ. தூரம் இருக்கும். காவல் நிலையத்திலிருந்து நேராக சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. வழியில் சில இடங்களை கண்காணித்துவிட்டு பின்னர் தான் சம்பவ இடம் சென்றோம். இந்த வழக்கில் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் ரகசிய தகவல் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றாலும் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் எதிரியை சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றாலும், அவரிடமிருந்து எந்த ஒரு வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏதுவாக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை பொது மக்கள் முன்னிலையில் அழிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி

மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.